ஸ்ரீ பாரதி கலை அறிவியல் மகளிர் கல்லூரி, கைக்குறிச்சி
முதுகலை இரண்டாமாண்டு
தொல்காப்பியம்
வினா விடை வங்கி.

பாடக்குறியீடு: P16TA42

இரண்டு மதிப்பெண் வினாக்கள்:-

அலகு - I

1. எட்டு வகை மெய்ப்பாடுகளைக் கூறுக.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.

மெய்யாகிய உடம்பின் வழியாகத் தோன்றும் மெய்ப்பாடுகளை எட்டு வகையாகக் குறிப்பர். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பனவாகும்.

2. பேதைமை என்பது என்ன?

பேதைமை என்பது அறிவின்மை எனப்படும். இது தன் அறிவின்மை கண்டு பிறர் நகுவதும் பிறர் அறிவின்மை கண்டு தான் நகுவதும் என இருவகையில் அமையும்.

3. பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் எத்தனை?

பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் இருபது ஆகும்.

4. புணர்ந்துழி உண்மை - விளக்குக

தலைவனோடு தலைவி உடன் கொண்டிருந்தாலும் அவனோடு கூடுவதற்கு உண்மையாக விரும்புதல் 'புணர்ந்துழி உண்மை' எனப்படும்.

Scanned with CamScanner

5 மெய்ப்பாடு அறிதல் என்றால் என்ன?

மெய்ப்பாடு அறிதல் என்பது மெய்ப்பாடுகளை கண்ணால் காண்பவர்களும் செவியால் உணர்பவர்களுமாகிய நுட்ப அறிவுடைய மாந்தர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்.

அலகு - 2

1. "உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை" - விளக்குக

"உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை" என்பது உவமைகளை ஆராய்ந்து பார்க்கும்போது அவை உயர்ந்த பொருளைப் பற்றியே அமையும்.

2. வினை உவமைக்குரிய உருபுகள் யாவை?

"அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்"

அன்ன, ஆங்க, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்கு என்னும் எட்டும் வினை உவமைக்குரிய உருபுகள் ஆகும்.

3. 'உள்ளுறை உவமம்' - விளக்குக

"பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபின் கூறும் காலைத்
துணிவொடு வருஉம் துணிவினோர் கொளினே"

உவமையாகக் கூறப்படும் பொருள் இதுவெனக் கூறுவது போல உவமேயப் பொருள் இதுவெனக் கூறாது உவம நிலங்களில் பிறந்த கருப்பொருள் வழி உணர்ந்தோர் அறிந்து கொள்வதாகும்.

4. உவமப் போலி என்றால் என்ன?

உவமைப் போல வருவது உவமப்போலி ஆகும். அவை வினை, பயன், மெய், உரு, பிறப்பு அடிப்படையில் வரும்.

5. 'நடுமாறு வரலும் கடி வரைவு இன்றே' - விளக்குக.

உவமையில், ஒன்றனை உவமைப் படுத்திச் சொல்லும் போது இதுவா, அதுவா என ஐயம் ஏற்படுத் நடுமாற்றம் ஏற்படுவதும் உண்டாம்.

அலகு - 3.

1. மாத்திரை என்பது என்ன?

மாத்திரை என்பது எழுத்துக்கள் இயல்பாக ஒலிக்கும் கால அளவைக் குறிக்கும்.

2. "முன் நிரை உறினும் அன்ன ஆகும்" - விளக்குக

உரியசை ஆகிய நேர்பு, நிரைபு அசைகளைத் தொடர்ந்து நிரையசை வரின் ஆசிரிய உரிச்சீர் எனப்படும்.

3. சிந்தடி என்பது என்ன?

"ஏழ் எழுத்து என்ப சிந்தடிக்கு அளவே" நாற்சீரில் அமையும் அளவடியல் ஏழு எழுத்துக்கள் பெற்று வருவது சிந்தடி ஆகும். இரண்டு எழுத்துக்கள் சேர்ந்த ஒன்பது எழுத்துக்களும் வரும்.

Scanned with CamScanner

4. யாப்பு என்பது என்ன?

யாப்பு என்பது பாக்களின் அடிப்படையான கட்டமைப்புகளை விளக்குவதாகும்.

5. தொடை வகைகள் யாவை?

'மோனை எதுகை முரணே இயைபென
நால்நெறி மரபின தொடை வகை என்ப'

மோனை, எதுகை, முரண், இயைபு என நான்கு வகையில் மரபு வழியாகப் பாகுபாடு செய்தல்

அலகு-4.

1. நோக்கு என்பது யாது?

"மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்குஎனப் படுமே"

ஒன்றை எழுதும்போது கருதிய பொருளை மாத்திரை முதலாக அடி அளவு வரை ஒரே நோக்கில் படைப்பது நோக்கு எனப்படும்.

2. 'செவியறிவுறூஉ' - விளக்குக.

செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத்து அற்றே,

செருக்கும் சினமும் இல்லாமல் பெரியோர் வாழும் இடத்தில் அடக்கத்தோடு பணிந்து வாழவேண்டும் எனச் செவிக்கு மருந்து போல அறிவுரை கூறுவதாகும்.

Scanned with CamScanner

3. களவில் கூற்று நிகழ்த்துவோர் யார்?

'பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தியொடு
அளவியல் மரபின் அறுவகை யோரும்,
களவினிற் கிளவிக்கு உரியர் என்ப'.

களவொழுக்கத்தில் கூற்று நிகழ்த்தும் இயல்புடையவர்களாக அறுவர் குறிக்கப்பட்டுள்ளனர். பார்ப்பன், பாங்கன், தோழி, செவிலி, தலைவன் தலைவி ஆகியோர் ஆவர்.

4. முடுகு வண்ணம் என்பது என்ன?

முடுகு வண்ணம் முடிவு அறியாமல்
அடியிறந்து ஓடி அதனோர் அற்றே.

நான்கு சீரடிகளுக்கு மிகுதியாகச் சீர் பெற்று அராகஇயல்போடு வருவது முடுகு வண்ணம் எனப்படும்

5. இயைபு- விளக்குக,

'ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடங்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்கவண் மொழியின்
இயைபின் இலக்கணம் இயைந்தது ஆகும்'.

வல்லின மெய்கள் இல்லாமல் ஏனைய எழுத்துகள் அளவை-வரும் சொற்கள் நான்கு சீர்களால் எழுத்து அளவை ஈறாக யோடு வரும் குறளடி முதலாக கழிநெடிலடி எடுத்தலோசையுடன் உள்ளவை தம்முள் ஒத்து செய்யுள் ஆகும் வருபவை இயைபு என்னும்

அலகு - 5

1. இளமைப் பெயர்கள் நான்கினைக் குறிப்பிடுக.

பார்ப்பு, பறழ், குட்டி, குருளை

2. நாலறிவு உயிர்கள் என்பவை யாவை?

தொடுதல், சுவைத்தல், நுகர்தல், காண்டல் ஆகிய நான்கு உணர்வுகளை உடைய உயிர்கள் நாலறிவு உயிர்கள் ஆகும்.

3. "அந்தணர்க்கு அரசு வரைவு இன்றே". விளக்குக.

முப்புரியும் கமண்டலமும் முக்கோலும் உடைய அந்தணர்கள் அரசர் கருமங்களில் வரையறை இல்லாமல் பங்கு கொள்வர் என்பதாகும்.

4. நால்வகை வழி நூல்கள் யாவை?

'தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே'

முதல்நூலை அடிப்படையாகக் கொண்டு யாக்கப்பெறும் வழிநூல் தொகுத்து அமைத்தல், விரித்துக் கூறுதல், தொகுத்தும் விரித்தும் அமைத்தல், மொழி பெயர்த்தல் என்னும் நான்கு நிலையில் அமையும்

5. 'எதிர் பொருள் உணர்த்தல்' - விளக்குக.

முடிந்த முடிபாக இல்லாமல் எதிர் காலத்திற்கும் பொருந்தி வருமாறு கூறி உணர்த்தல் என்பதாகும்.

Scanned with CamScanner